# பத்திரிக்கைச் செய்தி

16.02.2019 அன்று இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அவர்கள் உத்தரவின் பேரில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கன்னியாகுமரி பிரிவு அலுவலர்கள் மற்றும் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர்களுடன் இணைந்து திரு.மாடசாமி சுந்தரராஜ், உதவி செயற் பொறியாளர், பேரூராட்சி அலுவலகம் கன்னியாகுமரி மாவட்டம் அவர்களின் அலுவலகத்தில் திடீர் சோதனை நடைபெற்றது. அப்பொழுது கணக்கில் வராத பணம் ரூ.4,09,380/- கைப்பற்றப்பட்டு, அதனடிப்படையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கன்னியாகுமரி பிரிவு குற்ற எண். 1/2019 சட்டப்பிரிவு 102 கு.வி.மு.ச. மற்றும் 7 ஊழல் தடுப்பு சட்டம் 2018 பிரகாரம் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதன்படி 19.02.2019 அன்று மேற்படி வழக்கின் எதிரியின் இல்லம் மற்றும் அவர் வைத்துள்ள வங்கிக் கணக்குகள் மற்றும் இதர இடங்களில் சோதனை நடத்திய போது அவருடைய இல்லத்தில் இருந்து கணக்கில் காட்டப்படாத ரொக்கத் தொகை ரூ.7,17,600/-, 150 சவரன் தங்க நகைகள், 808.8 கிராம் வெள்ளி பொருட்கள், 14 வங்கிக் கணக்குகள் மற்றும் 24 காப்பீட்டு பாலிசிகள், சொத்து ஆவணங்கள் மற்றும் 2 கார்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் அவருடைய வங்கி லாக்கரை சோதனை செய்தபோது அதில் 162 சவரன் தங்க நகைகள் மற்றும் ஆவணங்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இவ்வழக்கு தொடர்பாக விசாரணை நடைபெற்று வருகிறது.